தேதி.15.10.2024

**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No**. 31/2015 திரு.கதிரேசன் வா.சா. 1

**வா.சா.1:சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1,3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நஞ்சப்பகவுண்டர் அக்ரிமெண்ட் போட்டிருந்தார். என்ன அக்ரிமெண்ட் என்றால் வீட்டின் மீது போட்டிருந்தார். அது அவரது பூர்வீக சொத்தா அல்லது சுயார்ஜித சொத்தா என்றால் விலைக்கு வாங்கிய சொத்து. என்ன விலைக்கு வாங்கினார் என்றால் தெரியாது. அந்த கிரையப்பத்திரத்தை கொடுத்தாரா என்றால் அவரது அண்ணாவிடம் இருக்கிறது என்றார். அவரது அண்ணாவின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. கிரைய பத்திரத்தின் நகல் கொடுத்தாரா என்றால் தருவதாக சொன்னார் ஆனால் தரவில்லை. அந்த சொத்து பிதுராஜ்ஜிய சொத்து என்று சொன்னால் பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்தை எனக்கு அக்ரிமெண்ட் கொடுத்தார்கள். 2ம் பிரதிவாதி தர்மராஜன் நஞ்சப்பகவுண்டரின் மகன் என்றால் சரிதான். நஞ்சப்பகவுண்டருக்கு என்ன வயது என்றால் அக்ரிமெண்ட் போடும்போது 75 வயதிற்கு மேல் இருக்கும். நஞ்சப்பகவுண்டரின் மகன் எதற்காக கையெழுத்து போட்டார் என்றால் அவரே விலை பேசியிருந்தார். அதற்காக அவரிடமும் சேர்த்து கையெழுத்து போட்டார். அக்ரிமெண்ட் போடும் போது 3ம் பிரதிவாதிக்கு என்ன வயது என்றால் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதிக்கு திருமணமாகியிருந்ததா என்றால் தெரியாது. அவரைப்பற்றி எனக்குதெரியாது. அக்ரிமெண்ட் போட்ட சொத்தில் பிரதிவாதிகள் குடியிருந்தாரா என்றால் 1,2ம் பிரதிவாதிகள் நஞ்சப்ப கவுண்டருடன் குடியிருந்தார்கள். 3ம் பிரதிவாதி எங்கு குடியிருந்தார் என்று எனக்கு தெரியாது. நஞ்சப்ப

கவுண்டர் உடல் நிலையும் மனநிலையும் சரியில்லாமல் நோய்வாய்ப்பட்டிருந்தார் என்றும், என்ன நடப்பது என்பது பற்றி புரியாமல் இருந்தார் என்றால் சரியல்ல. அவரே அனைத்து முடிவுகளையும் எடுத்து விலைபேசினார். தர்மராஜும் நானும் சேர்ந்து தான் அவருக்கு சொன்னோம் என்றால் இல்லை. நஞ்சப்ப கவுண்டரே தான் விலை பேசினார். பணம் வாங்கினார். தர்மராஜ் பணம் எதுவும் வாங்கினாரா என்றால் பணம் எதுவும் வாங்கவில்லை. வா.சா.ஆ.2ல் தாவா சொத்து பிதுராஜ்ஜிய வகையிலும், சுயார்ஜித வகையிலும் பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. பிதுராஜ்ஜிய வகையில் பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியும் என்றும் வேண்டுமென்றே 3ம் பிரதிவாதியிடம் கையொப்பம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 கிரைய உடன்படிக்கை எழுதுவதற்கு நஞ்சப்பகவுண்டருக்கும் அவரது மகனுக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா-ஆ3 எப்போது ஏற்படுத்தப்பட்டதுஎன்றால் 19.03.2012. இந்த தேதியில் நஞ்சப்பகவுண்டர் அவரது மகன் தர்மராஜுடன் பவர் பத்திரம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய தாயார் கண்ணம்மாள் பெயரில் பவர் பத்திரம் எழுதப்பட்டது. வா.சா.ஆ.3ல் உள்ள சாட்சிகள் தான் பவர் பத்திரத்தையும் தயார் செய்தார்கள் என்றால் சரிதான். பவர் அவரே தான் பண்ணிக்கொடுத்தார். நான் லேவாதேவி செய்வேனா என்றால் செய்யவில்லை. தர்மராஜ் என்னிடம் பணம் வாங்கியதற்காக தர்மராஜுன் தகப்பனாரிடம் கையொப்பம் வாங்கினேன் என்றால் சரியல்ல. நஞ்சப்ப கவுண்டர் எப்பொழுது காலமானார் என்றால் அக்ரிமெண்ட் போட்டு 10 மாத காலத்தில் காலமாகிவிட்டார். 3ம் பிரதிவாதிக்கு நோட்டீஸ் அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். 3ம் பிரதிவாதியின் எங்கிருக்கிறார் என்று தெரியாத நிலையில் 3ம் பிரதிவாதிக்கு அனுப்பிய நோட்டீஸில் முகவரி குறிப்பிட்டு எவ்வாறு அனுப்பினேன் என்றால் 3ம் பிரதிவாதியின் நோட்டீஸ் 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு அனுப்பினேன். 1ம் பிரதிவாதிக்கு என்னுடைய பதிவு தபால் இன்டிமேட்டன் என்று எழுதி பின்னர் அடித்து

ரிட்டன் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் சரிதான். நான் அனுப்பிய நோட்டீஸின் விவரங்கள் 1ம் பிரதிவாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நானும், 1ம் பிரதிவாதியும் வரவு செலவு செய்துவிட்டு அதற்காக வா.சா.ஆ.3 ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் இல்லை. நஞ்சப்ப கவுண்டர் இறந்த பின்னர் அவரது சொத்து வாரிசு என்ற முறையில் 1, 3ம் பிரதிவாதிகளுக்கு வரும் என்பதால் தவறாக முகவரிக்கு 1, 3ம் பிரதிவாதிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி வழக்கை தான் பார்த்துக்கொள்வதாக சொன்னதின் பேரில் 1,3 பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டார்கள் என்றால் இல்லை. ஒரு தலைபட்சமாக உத்திரவு வாங்கி நிறைவேற்று மனு தாக்கல் செய்த பிறகு அறிவிப்பை பெற்ற பின்னர் தான் அவர்களுக்கு இது பற்றி தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

**1, 3ம் பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்.15.10.2024